BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

**காலநிலை மற்றும் சக்தியை பேணிக்காத்தலை எடுத்துக் காட்டுகின்ற நகரங்களின் முன்னோடி திட்டப்பணிக்கான, மேயர்களின் உலகளாவிய உடன்படிக்கை-க்கு பின்னர், உள்ளூர் காலநிலை நடவடிக்கை பொருத்து, ப்ராம்ப்ட்டன் நகரம் முன்னணி நகரமாக அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கிறது**

ப்ராம்ப்ட்டன், ON (பிப்ரவரி 3, 2021) – கனடா நாட்டில் காலநிலை மற்றும் சக்தியை (GCoM) பேணிக்காத்தலை எடுத்துக் காட்டுகின்ற நகரங்களுக்கான முன்னோடி திட்டப்பணிக்கான மேயர்களின் உலகளாவிய உடன்படிக்கையை நிறைவேற்றிய 25 நகராட்சிகளில் ப்ராம்ப்ட்டன் நகரமும் ஒன்று; இந்த திட்டப்பணியானது உள்ளூர் காலநிலை பற்றிய நடவடிக்கை மீது கவனம் செலுத்துகிற, ஒரு வருடகால, அதிதீவிரமான நிகழ்ச்சித் திட்டமாகும். ப்ராம்ப்ட்டன் நகரமானது காலநிலை பேணுதல் பற்றிய தனது முயற்சிகளின் விளைவாக "குறைப்புக்கான சின்னம்" (மிட்டிகேஷன் பேட்ஜ்(Mitigation Badge)) பெற்றுள்ளது.

எந்தெந்த நகரங்கள் தங்கள் சமுதாயத்தில் பசுமை வாயு பயன்பாட்டுக்கான ஆதாரவள கையிருப்பினை நிறைவேற்றுகின்றனவோ, மாசு உமிழ்தல் இலக்குகளை அமைக்கின்றனவோ, மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரின் சமுதாய சக்தி மற்றும் உமிழ்வுகள் குறைக்கும் திட்டம் (சமுதாய சக்தி மற்றும் உமிழ்வுகள் குறைப்புக்கான திட்டம்Community Energy and Emissions Reduction Plan (CEERP)) போன்ற குறைப்புக்கான அங்கீகாரம் பெற்ற திட்டம் வைத்திருக்கின்றனவோ, அந்த நகரங்களுக்கு இந்த மிட்டிகேஷன் பேட்ஜ் (Mitigation Badge) என்பது விருதாக வழங்கப்படுகிறது.

ப்ராம்ப்ட்டன் நகரமானது, ஆகஸ்ட் 2019 இல் GCoM கனடாவினால் முன்னணி வகிக்கப்பட்ட முதலாவது எடுத்துக்காட்டு நகரங்கள் அடங்கிய குழுமத்தில் சேர தேர்ந்தெடுக்கப்பட்டது; இதற்காக, உள்ளூர் மட்டத்தில் காலநிலைக்கான நடவடிக்கையை சுதந்திரமாக உயர்த்துவதற்கான ஆதரவினை இந்நகரம் பெற்றது; இதில் தொழில்நுணுக்க ஆதரவு, பயிற்சி, தனித்துவமான வலைப்பின்னல் சந்தர்ப்பங்கள், கருவிகள் மற்றும் ஆதாரவளங்களுக்கான அணுகல் ஆகிய இவை அனைத்தும் காலநிலை பற்றிய குறிக்கோள்களை அடையும் வண்ணம் சேர்க்கப்பட்டன.

GCoM க்கான ப்ராம்ப்ட்டன் நகரின் அர்ப்பணிப்பானது ப்ராம்ப்ட்டன் நகரை நகர காலைநிலை முன்னணியாளர் நிலைக்கு அர்ப்பணிப்பு கொண்ட மிகப்பெரிய உலகலாவிய கூட்டணியுடன் இணைக்கிறது; இந்தக் கூட்டணியானது 800 மில்லியன் மக்களுக்கு பிரதிநிதித்துவம் செய்கின்ற

6 கண்டங்களில் இருக்கின்ற 10,000 க்கும் மேலான நகரங்கள் மற்றும் உள்ளூர் அரசாங்கங்கள் மேற்கொண்ட உறுதிமொழியின் மீது கட்டமைகிறது.

GCoM கனடா என்பது கனடா நாட்டு நகராட்சிகளின் கூட்டமைப்பு(FCM), நிலைத்த தன்மைக்கான உள்ளூர் அரசுகள்-ICLEI, மேயர்கள் செயலகத்தின் உலகளாவிய உடன்படிக்கை மற்றும் ஐரோப்பிய யூனியனால் நிதியாதாரம் அளிக்கப்படுகின்ற சர்வதேச நகர்ப்புற கூட்டுறவு திட்டப்பணி ஆகிய அனைத்தின் கூட்டு முயற்சியாகும்.

**லின்குகள்**

- காலநிலை சார்ந்த முன்னெடுப்புக்காக முன்னணி வகிக்கின்ற வகையிலான அதிதீவிரமான முன்னணி திட்டப்பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 25 நகராட்சிகளில் ப்ராம்ப்ட்டன் நகரமும் ஒன்று (Brampton among 25 Canadian municipalities selected for an intensive pilot with a leading global climate initiative)
- சமுதாயம் சார்ந்த சக்தி மற்றும் உமிழ்வுகள் குறைக்கும் திட்டம் ( Community Energy and Emissions Reduction Plan (CEERP))
- உலகளாவிய மேயர்களின் உடன்படிக்கை (Global Covenant of Mayors)

**அறிஞர் கூற்றுக்கள்**

"இந்த முதல் திட்டப்பணியில் பங்கேற்பதன் மூலம் தேசிய மற்றும் சர்வதேச அளவில் உள்ளூர் காலநிலை நடவடிக்கைகளில் ஒரு முன்னணியாளராக ப்ராம்ப்ட்டன் நகரம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டு நகரங்களின் முன்னணி திட்டப்பணிகளை நிறைவு செய்த 25 நகராட்சிகளில் ஒன்றாக இருப்பதில் பெருமிதம் கொள்கிறோம்; மேலும் கனடாவின் காலநிலை இலக்குகளை பூர்த்தி செய்வதற்கும், பசுமை இல்ல வாயு உமிழ்வுகளைக் குறைப்பதற்கும், ஒருவழியாக உலகளாவிய காலநிலை மாற்றம் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கும் நிலைத்து நிற்கும் தன்மை மற்றும் குறைந்த கார்பன் பதிவு என்பதற்கான தீர்வுகள் காணவும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்."

- *பேர்டிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டனில் காலநிலையைப் பேணி காப்பதற்கான முயற்சிகளில் நாங்கள் முன்னிலை வகிக்கிறோம், மேலும் எங்கள் கார்பன் பதிவு தடம் மீது உண்மையான தாக்கத்தை ஏற்படுத்துகிறோம். CEERP மூலம் நாங்கள் ஒரு பசுமை பேருந்து போக்குவரத்து நெட்வொர்க்கையும், மற்றும் நடந்து செல்வதற்கான சுற்றுப்புறங்களையும் உருவாக்குகிறோம், கட்டிடங்களிலும் இதற்கான பொருத்தங்களைச் செயல்படுத்துகிறோம், இதுவல்லாமல் மேலும் பலவும் உள்ளன. இது எங்கள் நகரத்தில் ஒரு முக்கியமான மற்றும் உற்சாகமான நேரம். அங்கீகாரம் பெற்ற GCoM க்கும் இதுவரை இந்த மாற்றத்தில் ஒரு அங்கமாக இருந்த அனைவருக்கும் எங்கள் நன்றி. "

- *பால் விசெண்ட், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைமைப் பொறுப்பு, பொதுப்பணி மற்றும் பொறியியல் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரமாகும்; இது 2050 ஆம் ஆண்டளவில் ப்ராம்ப்ட்டனில் கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வை 80 சதவிகிதம் அளவுக்கு குறைப்பதற்கான இலக்கைக் கொண்டுள்ளது. எங்கள் லட்சியநோக்கிலான மற்றும் உருமாற்றும் தன்மையிலான CEERP ஆனது, சக்தி திரட்டும் திறமை கொண்ட வீடுகள் மற்றும் கட்டிடங்கள் அமைப்பது, தூய்மையான ஆற்றலை உற்பத்தி செய்வது, வளர்ந்து வரும் ப்ராம்ப்ட்டனின் போக்குவரத்து நெட்வொர்க், நடைபாதை தடங்கள் மற்றும் இருசக்கர வாகனங்கள் செல்வதற்கான உள்கட்டமைப்பு  போன்ற, இன்னமும் அதிகமான இலக்குகளை உள்ளடக்கியது. எடுத்துக்காட்டு நகரங்களின் முன்னணி திட்டப்பணியை முடிப்பதே இந்த காலநிலை நடவடிக்கையின் ஒரு மைல்கல் ஆகும். ”

- *டக் வில்லன்ஸ், நகர கவுன்சிலர், வார்டுகள் 2 & 6;* காலநிலை மற்றும் சக்தியை எடுத்துக் காட்டும் நகரங்களின் முன்னோடி திட்டப்பணிக்கான மேயர்களின் உலகளாவிய உடன்படிக்கை-யில் ப்ராம்ப்ட்டன் நகர பிரதிநிதி*; உறுப்பினர், CEERP சமுதாய பணிப்படை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“ நிலைத்து நிற்கும் தன்மைக்காகவும், குறைந்த கார்பன் படிமானத்திற்கான தீர்வுகள், மற்றும் காலநிலை நடவடிக்கை பொருத்தவரையில், நகராட்சிகளில் முன்னணியாளராக இருந்து ஒரு  தாக்கத்தை ஏற்படுத்த ப்ராம்ப்ட்டன் நகரில்  கார்பன் பதியும் தடம் குறைப்பதிலும் நகர ஊழியர்கள் உறுதியாக உள்ளனர். நாங்கள் ஒத்துழைப்பு, முன்னோக்கு சிந்தனை மற்றும் பசுமை நகரமாக ஆக்குவதற்கான ப்ராம்ப்ட்டன் நகரின் பயணத்திற்கு நம்மை அர்ப்பணித்துள்ளோம்.

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“பேருந்து போக்குவரத்து வாகனங்களில் இதற்கான கட்டமைப்புக்களை உருவாக்குவது முதல், கட்டிடங்களிலும் இதனை ஏற்படுத்துவது வரை, குறைந்த கார்பன் படிமான தீர்வுகளுக்கு நகராட்சிகள் வழிவகுக்கின்றன. கனடாவின் *GHG* உமிழ்வுகளில் பாதியை நகராட்சிகள் மூலம் குறைக்கும் வகையில், உள்ளூர் தீர்வுகளை அதிகரிப்பதே, கனடாவின் காலநிலை இலக்குகளை அடைவதற்கு முக்கிய பணியாகும். காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைச் சமாளிப்பதற்கும் தங்கள் வகையில் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கும் நேரடி நடவடிக்கை எடுத்ததற்காக நாங்கள் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தைப் பாராட்டுகிறோம். ”

- *கார்த் ஃப்ரிஸ்ஸெல், FCM தலைவர்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம்,

தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca